# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8066966

1. District மாவட்டம்: விழுப்புரம் PS. காவல்நிலையம்: [illegible] Year: ஆண்டு 2019 FIR No முத அ. எண்: 09/19 Date நாள்: 18.6.19.

2. (i) Act சட்டம்: PC ACT 1988 as Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: amended by prevention Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: of corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்: Date from நாள் முதல்: 17.6.19 Date to நாள் வரை:
   Time Period நேர அளவு: Time from நேரம் முதல்: 19.30 Time to நேரம் வரை: 22.30.
   (b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: Time நேரம்: 18.06.2019 at 14.00 hours
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Time நேரம்: 18.06.2019 at 14.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: மேற்கு 75 K.m.
   Beat Number : முறைக் காவல் எண்: (b) Address முகவரி: சார்பதிவாளர் அலுவலகம் சங்கராபுரம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
   — Nil —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: அ. அருணா. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம்: இந்தி (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: அரசுப்பணி/ துணை இயக்குநர் (g) Address : முகவரி: கடலூர்
   - 5 அலுவலக கடலூர் மாவட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   S. ஜோதி சார்பதிவாளர் சங்கராபுரம் விழுப்புரம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - Nil -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 18.06.2019 ந்தேதி மாலை 14.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திருமதி.அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர்.பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்:அ/247/2019, நாள்:18.06.2019 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - சங்கராபுரம் சார்பதிவாளர் அலுவலகம் - 17.06.2019 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - நடவடிக்கை - தொடர்பாக:- பார்வை : திடீர் ஆய்வு மகஜர் நாள்:17.06.2019. கடந்த 17.06.2019 ந் தேதி மாலை சுமார் 14.00 மணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எனது அலுவலக அறையில் பணியில் இருந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் தாலுக்காவில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியிலிருந்த சார் பதிவாளர் திருமதி. S.ஜோதி அவர்கள் ஆவணங்களை பதிவு செய்ய வரும் பொது மக்களிடம் லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலை பெற்று உடனடியாக புறப்பட்டு விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியிலிருந்த துணை காவல் கண்காணிப்பாளர் திரு.N.தேவநாதன் அவர்களிடம் மேற்படி அலுவலகத்தை திடீராய்வுசெய்வது சம்மந்தமாக கலந்தாலோசனை செய்து பின்னர் நான், ஊ.த.க.பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.N.தேவநாதன் மற்றும்

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

குழுவினருடன் சுமார் 16.30 மணிக்கு விழுப்புரத்திலிருந்து காவல் வாகனத்திலிருந்து புறப்பட்டு சுமார் 18.30 மணிக்கு சங்கராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சுமார் 500 மீட்டருக்கு முன்பாக வாகனத்தை நிறுத்தி பின்னர் எனது அறிவுரையின்படி மேற்படி அலுவலகத்திற்குள் சுமார் 19.20 மணிக்கு எனது குழுவினருடன் சென்று அங்கு பணியிருந்த பின்னர் பெயர் விலாசம் பதவி கேட்டு தெரிந்துகொண்ட சார் பதிவாளர் S.ஜோதி, வயது 46/2019, க/பெ A. சத்தியமூர்த்தி(Late), E Block, சமங்கலி நகர், கவரை தெரு, கள்ளக்குறிச்சி என்பவரை அனுகி அவரிடம் என்னையும் ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.N.தேவநாதன் மற்றும் அவரது குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்து மேற்படி அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்யப்போவதாக தெரிவித்தேன். பின்னர் சுமார் 19.30 மணிக்கு எனது தலைமையில் சங்கராபுரம் சார்பதிவாளர் அலுவலத்தை சார்பதிவாளர் S.ஜோதி முன்னிலையில் விழுப்புரம் ஊ.த.க பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.N.தேவநாதன் மற்றும் அவரது குழுவினர்களுடன் திடீர் ஆய்வு செய்தேன். அப்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் திருமதி. S.ஜோதி, உதவியாளர் திரு. வி.சேதுராமன், த/பெ விஸ்வேஸ்வரன், அலுவலக உதவியாளர் மணிமொழி, Data Entry Operator K.கார்த்தி, Scanner G.அன்பாக, Camera Operator S.ஜெயலட்சுமி ஆகியோர் அலுவலில் இருந்தனர். இவர்களை தனித்தனியாக விசாரணை செய்ததில் மேற்படி மூவரும் இவ்வலுவலகத்தில் தனியார் நிறுவனம் மூலமாக தொகுப்பூதியம் அடிப்படையில் பணிபுரிவதாக தெரிவித்தார்கள்.பின்பு சார்பதிவாளரின் மேஜை அருகே நின்று இருந்த திரு.சசிக்குமார், வயது.44/2019, த/பெ சந்திரசேகரன் என்பவரை விசாரணை செய்ததில் அவர் தான் அரசு பதிவு பெற்ற(B83/KKC/1999) பத்திர எழுத்தர் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே பொது மக்களுக்கு பத்திரம் எழுதி கொடுக்கும் வேலை செய்துவருவதாகவும், 17.06.2019-ந் தேதி ஐந்து ஆவணங்களை பதிவு செய்துள்ளதாகவும் அதில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை சார்பதிவாளர் அவர்களுக்கு தெரிவிக்க அலுவலகத்தின் உள்ளே வந்ததாகவும் தெரிவித்தார். அவரை DSP அவர்கள் எனது அறிவுரையின் பேரில் தனியாக அழைத்து சென்று சோதனை செய்தபோது மேல் விசாரணைக்கு கைப்பற்றக்கூடிய பணம் பொருட்கள் எதுவும் இல்லை என தெரிவித்தார். பின்னர் சார்பதிவாளரின் வலது புறத்தில் அமர்ந்திருந்த Camera Operator S.ஜெயலட்சுமி அவர்களின் எதிரே நின்றுகொண்டிருந்த நபரை விசாரணை செய்ததில் அவர் தனது பெயர் M.கொளஞ்சி, வயது-41/2019, த/பெ முனியன் என்றும் தான் பதிவு பெற்ற(A2/KKC,KLC/2018) பத்திர எழுத்தர் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே பொது மக்களுக்கு பத்திரம் எழுதி கொடுக்கும் வேலை செய்துவருவதாகவும், 17.06.2019 ந் தேதி ஐந்து ஆவணங்களை பதிவு செய்துள்ளதாகவும் அதில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை சார்பதிவாளர் அவர்களுக்கு தெரிவிக்க அலுவலகத்தின் உள்ளே வந்ததாகவும் தெரிவித்தார். அவரை DSP அவர்கள் எனது அறிவுரையின் பேரில் தனியாக அழைத்து சென்று சோதனை செய்தபோது மேல் விசாரணைக்கு கைப்பற்றக்கூடிய பணம் பொருட்கள் எதுவும் இல்லை என தெரிவித்தார். பின்பு சார்பதிவாளர் அலுவலகத்தின் Computer அறையை சோதனை செய்தபோது அங்கு இருந்த திரு. சையத் ஹபீப், வயது-62/2019, த/பெ இஸ்மாயில், திரு. முருகன், வயது 47/19, த/பெ அப்பாவு பிள்ளை ஆகியோர் இருந்தனர். இருவரையும் தனிதனியாக விசாரணை செய்ததில் இருவரும் அரசு பதிவு பெற்ற (A825/99/KLC, A1148/99/KLC) ஆவண எழுத்தர்கள் என்றும் இருவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே பொது மக்களுக்கு பத்திரம் எழுதி கொடுக்கும் வேலை செய்துவருவதாகவும், 17.06.2019 ந் தேதி அவரவர் பதிவு செய்துள்ள ஆவணங்களின் சந்தேகங்களை சார்பதிவாளர் அவர்களுக்கு தெரிவிக்க அலுவலகத்தின் உள்ளே வந்ததாகவும் தெரிவித்தார். அவரை DSP அவர்கள் எனது அறிவுரையின் பேரில் தனித்தனியாக அழைத்து சென்று சோதனை செய்தபோது மேல் விசாரணைக்கு கைப்பற்றக்கூடிய பணம் பொருட்கள் எதுவும்

அவர்களிடம் இல்லை என தெரிவித்தார். பின்னர் மேற்படி அறையை DSP மற்றும் குழுவினர் உதவியுடன் நான் சோதனை செய்தபோது xerox Machine க்கு கீழே ஒரு காக்கி நிற கவர் ஒன்று கிடந்தது. அதனை நான் சார்பதிவாளர் ஜோதி முன்னிலையில் ஆய்வு செய்தபோது அதில் ரூ. 29,100/- (2000X5=10,000/-, 500X35=17,500/- 200X6=1,200/-, 100X4=400/-) இருந்தது. இந்த தொகையை பற்றி சார்பதிவாளரிடம் விசாரிக்க அவர் என்னிடம் மேற்படி தொகை ரூபாய் 29,100/- எவ்வாறு அலுவலகத்திற்கு உள்ளே வந்தது தெரியவில்லை என்று தெரிவித்தார். பின்னர் அந்த அறையில் இருந்த ஆவண எழுத்தர்களான திரு. சையத் ஹபீப், மற்றும் திரு. முருகன் ஆகியோர்களிடம் மேற்படி தொகை பற்றி விசாரித்ததில் அது அவர்களுடைய தொகை இல்லையென தெரிவித்தார்கள். எனவே மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் கிடைக்காததால் நான் மேற்படி தொகை ரூபாய் 29,100/- யை மகஜரில் மேல் விசாரணைக்கு கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் மேற்படி கணிணி அறையில் கணிணி இருந்த மேஜையின் கீழ் சோதனை செய்ததில் ஒரு காக்கி நிற கவர் ஒன்று கிடந்தது. அதனை நான் சார்பதிவாளர் ஜோதி முன்னிலையில் ஆய்வு செய்தபோது அதில் ரூபாய்.15,200/- (2000X4=8,000/-, 500X12=6,000/- 100X12=1,200/-) இருந்தது. இந்த தொகையை பற்றி சார்பதிவாளரிடம் விசாரிக்க அவர் என்னிடம் மேற்படி தொகை ரூபாய் 15,200/- எவ்வாறு அலுவலகத்திற்கு உள்ளே வந்தது தெரியவில்லை என்று தெரிவித்தார். பின்னர் அந்த அறையில் இருந்த ஆவண எழுத்தர்களான திரு.சையத் ஹபீப், மற்றும் திரு. முருகன் ஆகியோர்களிடம் மேற்படி தொகை பற்றி விசாரித்ததில் அது அவர்களுடைய தொகை இல்லையென தெரிவித்தார்கள். எனவே மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் கிடைக்காததால் நான் மேற்படி தொகை ரூபாய் 15,200/- யை மகஜரில் மேல் விசாரணைக்கு கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் நான் சார்பதிவாளர் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரே இருந்த மேஜையின் கீழ் சார்பதிவாளர் முன்னிலையில் சோதனை செய்ததில் ஒரு காக்கி நிற கவர் ஒன்று கிடந்தது. அதனை நான் சார்பதிவாளர் ஜோதி முன்னிலையில் ஆய்வு செய்தபோது அதில் ரூ.22,900/- (2000X3=6,000/-, 500X28=14,000/- 200X10=2,000/-, 100X9=900/-) இருந்தது. இந்த தொகையை பற்றி சார்பதிவாளரிடம் விசாரிக்க அவர் என்னிடம் மேற்படி தொகை ரூபாய் 22,900/- எவ்வாறு அலுவலகத்தில் எனது இருக்கைக்கு கீழே வந்தது தெரியவில்லை என்று தெரிவித்தார். பின்னர் அந்த அறையில் இருந்த ஆவண எழுத்தர்களான திரு. சசிக்குமார், மற்றும் திரு. கொளஞ்சி ஆகியோர்களிடம் மேற்படி தொகை பற்றி விசாரித்ததில் அது அவர்களுடைய தொகை இல்லையென தெரிவித்தார்கள். எனவே மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் கிடைக்காததால் நான் மேற்படி தொகை ரூபாய்.22,900/- யை மகஜரில் மேல் விசாரணைக்கு கைப்பற்றிக்கொண்டேன். மேலும் சார்பதிவாளர் இருக்கைக்கு அருகில் இருந்த Camera Operator திருமதி.ஜெயலட்சுமி அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு கீழே சோதனை செய்ததில் ஒரு காக்கி நிற கவர் ஒன்று கிடந்தது. அதனை நான் சார்பதிவாளர் ஜோதி முன்னிலையில் ஆய்வு செய்தபோது அதில் ரூபாய்.18,900/- (2000X4=8,000/-, 500X20=10,000/- 100X9=900/-) இருந்தது. இந்த தொகையை பற்றி சார்பதிவாளரிடம் விசாரிக்க அவர் என்னிடம் மேற்படி தொகை ரூபாய் 18,900/- எவ்வாறு அலுவலகத்தில் எவ்வாறு வந்தது தெரியவில்லை என்று தெரிவித்தார். பின்னர் மேற்படி இருக்கையில் இருந்த Camera Operator திருமதி.ஜெயலட்சுமி அவர்களை விசாரித்தபோது அது அவருடைய தொகை இல்லையென தெரிவித்தார். எனவே மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் கிடைக்காததால் நான் மேற்படி தொகை ரூபாய்.18,900/- யை மகஜரில் மேல் விசாரணைக்கு கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் அலுவலகத்தின் உள்ளே தென்கிழக்கு மூலையில் நின்று கொண்டிருந்த நபர்களை சார்பதிவாளர் ஜோதி முன்னிலையில் தனித்தனியாக விசாரணை செய்ததில் 1) திரு.முத்து, வயது -45/19, த/பெ முத்துசாமி என்றும் இவர் சார்பதிவாளர் ஜோதி அவர்களுக்கு உதவியாக

ா. செல்வம் 18/6/19

அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்தார்.2) திரு.தட்சணாமூர்த்தி, வயது 38/19, த/பெ அன்பழகன் என்றும், தான் சார்பதிவாளர் திருமதி.ஜோதி அவர்களின் சொந்த வாகனமான TN 09 AD 5764 என்ற CHEVERLET OPTRA-ன் ஓட்டுநர் என்றும் மேற்படி சார்பதிவாளர் ஜோதி அவர்களை தினமும் கள்ளக்குறிச்சியிலுள்ள அவரது வீட்டிலிருந்து சங்கராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்த சென்று வருவதாகவும் அதற்கு மாத ஊதியமாக சார்பதிவாளர் அவர்களிடம் ரூபாய்.9,000/- பெறுவதாக தெரிவித்தார். பின்னர் அவர்களை DSP அவர்கள் எனது அறிவுரையின் பேரில் தனித்தனியாக அழைத்து சென்று சோதனை செய்தபோது மேல் விசாரணைக்கு கைப்பற்றக்கூடிய பணம் பொருட்கள் எதுவும் அவர்களிடம் இல்லை என தெரிவித்தார். பின்னர் மேற்படி அறையை DSP மற்றும் குழுவினர் உதவியுடன் நான் சோதனை செய்தபோது சார்பதிவாளர் மேஜைக்கு எதிரே இருந்த மற்றொரு மேஜையின் கீழ் ஆய்வு செய்ததில் ஒரு காக்கி நிற கவர் ஒன்று கிடந்தது. அதனை நான் சார்பதிவாளர் ஜோதி முன்னிலையில் ஆய்வு செய்தபோது அதில் ரூபாய்.10,100/- (500X15=7,500/- 200X10=2,000/-, 100X6=600/-) இருந்தது. இந்த தொகையை பற்றி சார்பதிவாளரிடம் விசாரிக்க அவர் என்னிடம் மேற்படி தொகை ரூபாய் 10,100/- எவ்வாறு அலுவலகத்திற்கு உள்ளே வந்தது தெரியவில்லை என்று தெரிவித்தார். பின்னர் அந்த இடத்தில் இருந்த முத்து, மற்றும் தட்சணாமூர்த்தி ஆகியோர்களிடம் மேற்படி தொகை பற்றி விசாரித்ததில் அது அவர்களுடைய தொகை இல்லையென தெரிவித்தார்கள். எனவே மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் கிடைக்காததால் நான் மேற்படி தொகை ரூபாய். 10,100/- யை மகஜரில் மேல் விசாரணைக்கு கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் அலுவலகத்தில் பணியில் இருந்த வி.சேதுராமன், K.கார்த்திக், G.அன்பரசு மற்றும் அலுவலக உதவியாளர் மணிமொழி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி ஆய்வு சமயத்தில் ஒரு சில பொது மக்கள் இருந்தனர், அவர்களின் பெயர் விலாசம் மற்றும் இதர விவரங்களை கேட்டபோது அவர்கள் மேற்படி தகவல்களை அளிக்க முன்வராததால் அவர்களின் விபரம் பதிவு செய்ய முடியவில்லை. பின்னர் அலுவலகத்தில் இருந்த பொது மக்களை எவ்வித மன உளைச்சலுமின்றி அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்ய சார் பதிவாளர் அவர்களுக்கு அறிவுரை வழங்கி பொது மக்களை அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளான A-கணக்கு, B-கணக்கு, C-கணக்கு, D-கணக்கு, "H" கணக்கு, சிறப்பு ஒட்டுதல் வில்லை இருப்பு கணக்கு பதிவேடு, நீதிமன்ற ஒட்டுவில்லை இருப்பு கணக்கு பதிவேடு, நீதி மன்றம் சாரா முத்திரைத்தாள் இருப்பு பதிவேடு, Chlt கணக்கு, Spl. Marriage கணககு, Hindu Marriage கணக்கு, முத்திரைதாள் சட்டபிரிவு 41 ன் கீழ் பதிவேடு ஆகியவற்றை மேற்படி சார்பதிவாளர் முன்னிலையில் பார்வையிட்டதில் மேற்படி கணக்கு பதிவேடுகளில் பணம் பரிவர்த்தனை செய்யக்கூடிய முகாந்திரம் எதுவும் இல்லை. இது தொடர்பாக சார்பதிவாளர் ஜோதி அவர்களிடம் கேட்டபோது Online பணபரிவர்த்தனை செய்யப்படுவதால் பணமோ இதர ஆவணங்களோ அலுவலகத்தின் உள்ளே பயன்படுத்துவதில்லை என்று தெரிவித்தார். ஆனால் PA கணக்கில் மட்டும் ரூ. 250/- இருந்தது. அதனை சார்பதிவாளர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம் அலுவலகத்தில் இருந்த தனி நபர் பண இருப்பு பதிவேட்டினை பார்வையிட்டதில் அதில் பக்க எண். 19 ல் 17.06.2019 தேதியிட்ட பிரிவில் திருமதி.ச.ஜோதி அவர்களிடம் ரூபாய்.3,000/-மும் திரு.வி.சேதுராமன் அவர்களிடம் ரூபாய்.1,870/-மும் மற்றும் திரு.மணிமொழி அவர்களிடம் எவ்வித தொகையும் இல்லை என் தெரிவிக்கப்பட்டு அதில் சம்மந்தப்பட்ட நபர்கள் கையொப்பம் செய்திருந்தார்கள். திருமதி. ச.ஜோதி அவர்களிடம் குறிப்பிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.3,000/- பற்றி விசாரித்ததில் அத்தொகை தன்னுடைய கைப்பையில் இருப்பதாக கூறி ஆஜர் செய்தார். அதனை திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திரு.வி.சேதுராமன் அவர்களிடம்

குறிப்பிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.1,870/- பற்றி விசாரித்ததில் அத்தொகை தன்னுடைய மேல் சட்டையின் உள் பையில் இருப்பதாக கூறி ஆஜர் செய்தார். அதனை திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. தனி நபர் பண இருப்பு பதிவேட்டினை நான் மேல்விசாரணைக்காக கைப்பற்றி அதில் சம்மந்தப்பட்ட ஊழியர்களிடம் கையொப்பம் பெற்றும் நானும் துணைக் கண்காணிப்பாளர் அவர்களும் கையொப்பம் இட்டோம். மேலும் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கொடி நாள் வசூல் பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்யுமாறு சார்பதிவாளர் ஜோதி அவர்களை கேட்டுக்கொண்டபோது அவர் அலுவலகத்தில் கொடி நாள் வசூல் பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும் தற்போது அலுவலகத்தில் அதுபோன்ற பதிவேடு இல்லை என்று தெரிவித்தார். மேற்படி திடீராய்வில் எவ்வித முகாந்திரமும் இல்லாத தொகை ரூபாய்.96,200/- மற்றும் தனி நபர் பண இருப்பு பதிவேட்டினை மகஜரில் கைப்பற்றி மேற்படி நிகழ்வுகள் அடங்கிய மகஜரை நான் சொல்ல சொல்ல காவலர் ஒருவர் ஊ.த.க. அலுவலக மடிக்கணிணியில் தட்டச்சு செய்தார். மேற்படி மகஜர் இரவு சுமார் 22.30 மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்திலேயே முடிக்கப்பட்டது. எனவே மேற்படி சங்கராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் ஆய்வில் அதன் அலுவலர் திருமதி.S.ஜோதி அவர்கள் ஆவண பதிவுக்கு வரும் பொது மக்களிடம் லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி சார்பதிவாளர் திருமதி.S.ஜோதி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். இணைப்பு: 1.திடீர் ஆய்வு மகஜரின் உண்மை நகல் 2.ரொக்கம் ரூபாய் 96,200/- மற்றும் தனிநபர் ரொக்கப்பதிவேடு 3.திருமதி.ஜோதி மற்றும் 10 நபர்களின் அசல் வாக்குமூலம்.

அய்யா, நான் இன்று 18.06.2019 மாலை 14.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண்.09/2019 u/s 7 P.C. Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகல், வாதியின் புகார் மனு மற்றும் திருமதி.ஜோதி மற்றும் 10 நபர்களின் அசல் வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

18/6/19

(நி.தேவநாதன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.